**சுருக்கம்**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் – 2021–2022–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – மாண்புமிகு அமைச்சர் (ஊரகத் தொழில்) அவர்களால் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தொடர்பாக அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள் – நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(ஜி2)த்துறை**

அரசாணை (நிலை) எண்.128

நாள்: 03.11.2021.
பிலவ, ஐப்பசி 17
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்க:

மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் கடித ந.க.எண்.198/மே.பி/2021–22, நாள் 16.09.2021.

-----

**ஆணை:–**

மாண்புமிகு அமைச்சர் (ஊரகத் தொழில்) அவர்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2021–2022–ஆம் ஆண்டிற்கான வரவு செலவு கூட்டத் தொடரில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் தொடர்பாக பின்வரும் அறிவிப்புகளை அறிவித்துள்ளார்:–

| அறிவிப்பு எண். | அறிவிப்புகள் |
|---|---|
| 1. | ரூபாய் ஒரு கோடி செலவில் பூம்புகார் நிறுவனத்தின் பொன்விழா ஆண்டு சிறப்பாக கொண்டாடப்படும். |
| 3. | ரூபாய் 5 கோடி செலவில் 4 பூம்புகார் விற்பனை நிலையங்கள் புதுப்பிக்கப்படும். |
| 4. | ரூபாய் ஒரு கோடி செலவில் மாமல்லபுரத்தில் அமைந்துள்ள நகர்ப்புறக் கண்காட்சித் திடல் விரிவாக்கப் பணிகள் மேற்கொள்ளப்படும். |

2. மேலே படிக்கப்பட்ட மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் கடிதத்தில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் சார்ந்த பல்வேறு திட்டங்களை செயல்படுத்துவது குறித்து பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

(i) <u>அறிவிப்பு எண்.1</u>

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகமானது, பொதுத் துறை நிறுவனமாக 26.07.1973 அன்று முன்னாள் முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டு 01.08.1973 அன்று முதல் "பூம்புகார்" என்ற வணிகப் பெயரில் தனது வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. தொழில் வணிகத் துறை மற்றும் தமிழ்நாடு மாநில கூட்டுறவு வர்த்தக சங்கங்களின் கீழ் இயங்கி வந்த கைத்திறப் பொருட்கள் விற்பனை நிலையங்களும், பல்வேறு பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையங்களும் இந்நிறுவனத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இது பஞ்சலோகம், பித்தளை, மரம், கல் மற்றும் பிற பொருட்களைக் கொண்டு கைவினைஞர்களால் வடிவமைக்கப்பட்ட நேர்த்தியான கைவினைப் பொருட்களை காட்சிப்படுத்தி, அவற்றை நுகர்வோர் மற்றும் கலை ஆர்வலர்களுக்கு சந்தைப்படுத்துகிறது. தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் 2023-ஆம் ஆண்டில் 50-வது ஆண்டை நிறைவு செய்யும் பொன் விழாவைக் கொண்டாட உள்ளது.

எனவே மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திற்கு 2021-2022ஆம் ஆண்டின் அறிவிப்பில் பூம்புகாரின் பொன்விழா ஆண்டினை சிறப்பாக கொண்டாட ரூபாய் ஒரு கோடி நிதியுதவி வழங்குவதாக அறிவித்துள்ளார்கள்.

பொன்விழா ஆண்டில் நடத்தப்பட வேண்டிய செயல்பாடுகள் / நிகழ்வுகள் பின்வருமாறு:

1. பூம்புகார் பொன்விழா கண்காட்சிகள் மாநிலத்தின் அனைத்து முக்கிய நகரங்களிலும் சென்னை உட்பட அனைத்து பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் நடத்தப்படும்.
2. சென்னையில் மார்ச் 5ஆம் நாள் சிறந்த கைவினைஞர்களை கௌரவிப்பதற்காக "கைவினைஞர்கள் தினம்" விழாவை ஏற்பாடு செய்தல். மாண்புமிகு தமிழக முதலமைச்சர், விழாவிற்கு தலைமை தாங்கி விருதுகள் வழங்குதல் / கைவினைஞர்களை கௌரவித்தல்
3. தமிழ்நாட்டின் பிற நகரங்களில் பூம்புகார் பொன்விழா வளைவு அமைக்கப்படும்.
4. சென்னை அண்ணா சாலையில் உள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் பூம்புகார் பொன்விழா நினைவுத் தூண் அமைக்கப்படும்.

5. சட்டசபையில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல்.

6. 50ஆம் ஆண்டு பொன் விழாவில் பூம்புகாரின் சிறப்புத் திட்டங்களைத் துவக்கிவைத்தல்.

7. பூம்புகாரின் 50ஆம் ஆண்டு பொன் விழா மலரை வெளியிடுதல்.

50 வது பொன்விழா ஆண்டை சிறப்பிப்பதற்கான தேவைப்படும் செலவுகளின் விவரங்கள்

| வ. எண். | செலவுகளின் விவரம் | மொத்த செலவினத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சென்னை உட்பட அனைத்து விற்பனை நிலையங்கள் மற்றும் நாடெங்கிலும் உள்ள முக்கிய நகரங்களிலும் **"பூம்புகார் பொன்விழா சிறப்பு கண்காட்சி"** நடத்துதல் | 25.00 |
| 2 | பூம்புகார் பொன்விழா நினைவு வளைவு அமைத்தல். | 20.00 |
| 3 | பூம்புகார் பொன்விழா நினைவு தூன் பூம்புகார் விற்பனை நிலையம், அண்ணா சாலை, சென்னையில் அமைத்தல் | 20.00 |
| 4 | பூம்புகார் பொன்விழா மலரை (1000 எண்) வெளியிடுதல் | 5.00 |
| 5 | பூம்புகார் பொன்விழா நினைவு பரிசு வழங்குதல் | 5.00 |
| 6 | மேடை அலங்காரம், மின் | 3.00 |
| 7 | விளம்பரம் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) | 5.00 |
| 8 | அழைப்பிதழ்கள் அச்சிடுதல் | 2.00 |
| 9 | கலை நிகழ்ச்சிகள் | 5.00 |
| 10 | புகைப்படம் மற்றும் காணொளி செலவுகள் | 2.00 |
| 11 | உணவு ஏற்பாடு | 3.00 |
| 12 | நிகழ்ச்சி தொகுப்பாளர்கள் | 3.00 |
| 13 | இதர செலவுகள் | 2.00 |
| | மொத்தம் | **100.00** |

(ii) <u>அறிவிப்பு எண்.3</u>

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், பூம்புகார் என்ற சிறப்பு பெயரால் பிரபலமாக அறியப்படும் நிறுவனம் 1973 ஆம் ஆண்டில் சென்னை, கோவை, திருச்சி, தஞ்சாவூர், சேலம், ஈரோடு, கன்னியாகுமரி, மாமல்லபுரம், மதுரை மற்றும் சுவாமிமலை ஆகிய இடங்களில் முக்கிய விற்பனை நிலையங்களுடன் நிறுவப்பட்டது. பூம்புகாரின் முக்கிய விற்பனை நிலையங்களான சென்னை, கோயம்புத்தூர், புதுடெல்லி மற்றும் கொல்கத்தா ஆகிய விற்பனை நிலையங்கள் உடனடி சீரமைப்பு மற்றும் மறுசீரமைப்பு பணிகள் தேவைப்படுகிறது.

**1. பூம்புகார் விற்பனை நிலையம், சென்னை.**

சென்னை, பூம்புகார் விற்பனை நிலையம், 13,520 சதுர அடி பரப்பளவு கொண்ட முதல் தளத்துடன் நகரின் மையப் பகுதியான அண்ணா சாலையில் அமைந்துள்ளது மற்றும் இது சென்னை நகரத்தின் முக்கிய அடையாளமாகும். இந்த நிலையம் இந்நிறுவனத்தின் முதன்மை விற்பனை நிலையம் மற்றும் வருவாயை உருவாக்கும் முக்கிய நிலையமாகும்.

இந்த விற்பனை நிலையம் சுதந்திரத்திற்கு முன் கட்டப்பட்டது, மேலும், இக்கட்டமைப்பு 100 ஆண்டுகளுக்கு மேல் பழமையானது.இந்த நிலையம் 20 ஆண்டுகளுக்கு முன்பு புதுப்பிக்கப்பட்டது. விற்பனை நிலையத்தின் முழு உட்புறம், வெளிப்புறம், முன்புறத்தோற்றம் மற்றும் பிற காட்சி அமைப்புகளை புதுப்பிப்பது மிகவும் அவசியமாகும். கட்டடத்தின் சுவர்கள் மற்றும் மேற்பரப்பு தரைப்பகுதி சீரமைத்து மீட்கப்பட வேண்டும், இதனால் கட்டமைப்பு அப்படியே இருக்கும். விற்பனை நிலையத்தின் கூரைப்பகுதிகள் மிகவும் பழுததடைந்துள்ளதால் பழுது நீக்குதல் மற்றும் சீரமைப்புக்கு உடனடி கவனம் தேவைப்படுகிறது. இவ்விற்பனை நிலையத்தின் சீரமைப்பு பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.250.00 இலட்சம் ஆகும்.

**2. பூம்புகார் விற்பனை நிலையம், கோயம்புத்தூர்**

கோயம்புத்தூர் பூம்புகார் விற்பனை நிலையம் பெரிய கடைத்தெருவில் அமைந்துள்ளது. இந்த விற்பனை நிலையம் 6,189 சதுர அடி பரப்பளவு கொண்டது. தமிழ்நாட்டின் பாரம்பரிய கைவினைப் பொருட்களைக் அதிகளவில் காட்சிப்படுத்தி விற்பனையை விரிவுபடுத்துவதற்கும், விற்பனையை மேம்படுத்துவதற்கும் அதன் மூலம் இந்நிறுவனத்தின் வருவாயை அதிகரிப்பதற்குவழக்கமான உட்புற கண்காட்சிகளை ஏற்பாடு செய்வதற்கு அதிக வாய்ப்பு உள்ளது. விற்பனை நிலையத்தின் கூரைப்பகுதிகள் மிகவும் பழுதடைந்துள்ளதால் பழுது நீக்குதல் மற்றும் சீரமைப்புக்கு உடனடி கவனம் தேவைப்படுகிறது. இவ்விற்பனை நிலையத்தின் சீரமைப்பு பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.100.00 இலட்சம் ஆகும்.

**3. பூம்புகார் விற்பனை நிலையம், புதுதில்லி.**

பூம்புகார் விற்பனை நிலையம், புதுதில்லி அனைத்து மாநில எம்போரியா வளாகத்தில், பாபா கரக் சிங் மார்க், இர்வின் சாலை, முக்கிய இடத்தில் அமைந்துள்ளது. இந்த நிலையம் 3 மாடிகளுடன் சுமார் 10,572 சதுர அடி அளவுள்ள 45 ஆண்டுகளுக்கு முன்பிலிருந்து செயல்பட்டு வருகிறது. இந்நிலையம் 15 ஆண்டுகளுக்கு முன்பு புதுப்பிக்கப்பட்டது. உட்புறம், வெளிப்புறம், முன்புறத் தோற்றம் மற்றும் பிற காட்சி அம்சங்களுடன் முழு விற்பனை நிலையத்தை புதுப்பிப்பது மிகவும் அவசியமாக உள்ளது. இவ்விற்பனை நிலையத்தின் சீரமைப்பு பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.100.00 இலட்சம் ஆகும்.

**4. பூம்புகார் விற்பனை நிலையம், கொல்கத்தா**

கொல்கத்தா கரியாஹட் சாலையில் சிஐடி ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் தக்ஷிணபன்-ல் 1,052 சதுர அடி பரப்பளவு கொண்ட விற்பனை நிலையம். வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRI), உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகள், யாத்ரீகர்கள், வணிக நிர்வாகிகள் மற்றும் அரசு பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் அதிகம் வருகை தரும் இடமாக அமைந்துள்ளது. விற்பனை நிலையம் 1987–ஆம் ஆண்டு துவங்கப்பட்டது. உட்புற காட்சி ரேக்குகள், மேடைகள் மற்றும் வெளிப்புறத் தோற்றம் மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது. விற்பனை நிலையத்தின் இடைமட்ட தளம் (mezzanine floor) சேதமடைந்துள்ளது மற்றும் வலுவூட்டுதல்களுடன் மீட்டமைக்கப்பட வேண்டும். எனவே கொல்கத்தாவில் உள்ள இந்த விற்பனை நிலையத்தினை உடனடியாக சீரமைக்கப்பட வேண்டியுள்ளது. இவ்விற்பனை நிலையத்தின் சீரமைப்பு பணிக்கான உத்தேச மதிப்பீடு ரூ.50.00 இலட்சம்.

மேலே குறிப்பிட்டுள்ள 4 விற்பனை நிலையங்களை புதுப்பிக்க ரூ.500.00 இலட்சம் ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

| வரிசை எண். | பூம்புகார் விற்பனை நிலையங்கள் | எதிர்பார்க்கப்படும் செலவு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | சென்னை | 250 |
| 2. | கோயம்பத்தூர் | 100 |
| 3. | புதுதில்லி | 100 |
| 4. | கொல்கத்தா | 50 |
| | **மொத்தம்** | **500** |

**(iii) <u>அறிவிப்பு எண்.4</u>**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் (பூம்புகார்) மாமல்லபுரத்தில் உள்ள கடற்கரை சாலையில் சுமார் 4.45 ஏக்கர் நிலப்பரப்பில்

ரூ.4.25 கோடி செலவில் ஒரு நிரந்தர "நகர்ப்புற கண்காட்சி திடல்" அமைத்துள்ளது. இதில் ஒன்றிய அரசின் பங்கு ரூ.2.10 கோடி, மாநில அரசின் பங்கு ரூ.1.90 கோடி மற்றும் இந்நிறுவனத்தின் சுயநிதி பங்கு ரூ.25.00 இலட்சம் ஆகும். இத்திட்டத்திற்கான மொத்த மதிப்பீட்டு தொகை ரூ.5.00 கோடி ஆகும். தற்போது இக்கண்காட்சி திடலில் 36 விற்பனை கூடங்கள், தங்கும் விடுதி, நிர்வாக அலுவலகம், பொது வசதி போன்றவை சுற்றுச்சூழ்நிலைக்கு ஏற்ப அமைக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புறக் கண்காட்சித்திடலின் விரிவாக்க மற்றும் மேம்பாட்டுத் திட்டமாக, மேலும் 14 விற்பனை கூடங்கள், நகர்ப்புற விற்பனை காட்சி அரங்கம் மற்றும் சாலை அமைத்தல், கண்காட்சித் திடலை அழகுப்படுத்துதல் தெரு விளக்குகள், குழந்தைகள் விளையாட்டு பகுதி, வாகனம் நிறுத்தம் வசதிகள், சுற்றுசுவர் (வேலி) அமைத்தல், முகப்பு (நுழைவு வாயில்) அலங்காரம் ஆகியவற்றைக் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

நகர்ப்புறக் கண்காட்சித்திடலில் கூடுதல் பணிகளை மேற்கொள்ள தேவையான நிதியின் (எதிர்பார்க்கப்படும் செலவு) விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண். | செலவுகளின் விவரம் | மொத்த செலவினத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூடுதல் 14 விற்பனை கூடங்கள் | 50.00 |
| 2 | அனைத்து விற்பனை கூடங்களுக்கு கதவு (shutters) பொருத்துதல் | 15.00 |
| 3 | நுழைவு வாயிலில் கதவு மற்றும் வளைவு அமைத்தல் | 25.00 |
| 4 | உட்புறச்சாலை அமைத்தல் மற்றும் புல்வெளி சீரமைத்தல் | 10.00 |
| 5 | சாலை விளக்குகள் பொருத்துதல் | 5.00 |
| 6 | குழந்தைகள் விளையாட வசதிகளை அமைத்தல் | 10.00 |
| 7 | சுற்றுசுவர் மற்றும் வேலி அமைத்தல் | 10.00 |
| 8 | கைவினைப் பொருட்களின் செய்முறை விளக்கம் மற்றும் காட்சி மையம் அமைத்தல் | 50.00 |
| 9 | திட்ட ஆலோசகர் | 5.00 |
| | **மொத்தம்** | **180.00** |

மேற்கூறப்பட்ட பணிகளுக்காக எதிர்பார்க்கப்படும் செலவு ரூ.180.00 இலட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. 2021-2022-ஆம் ஆண்டு மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களால், நகர்ப்புறக் கண்காட்சித்திடலின் விரிவாக்கப் பணிக்காக ரூ.1.00 கோடி வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையான ரூ.80.00 இலட்சத்தை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் பிற ஆதாரங்கள் மூலமாகவும் மற்றும் அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) புது டெல்லியிலிருந்தும் கோரப்படும் எனத் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. 2021-2022-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை எண்.18-இன் கீழ் மாண்புமிகு அமைச்சர் (ஊரகத் தொழில்) அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளில், மேற்கண்ட அறிவிப்புகளை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் செயல்படுத்துவதற்கு ஏதுவாக ரூ.7,00,00,000/- (ரூபாய் ஏழு கோடி மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து வழங்குமாறு மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் செயற்குறிப்பை அரசு கவனமாக ஆய்வு செய்து, அதனை ஏற்று, 2021-2022-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை எண்.18-இன் கீழ் மாண்புமிகு அமைச்சர் (ஊரகத் தொழில்) அவர்களால் அறிவிக்கப்பட்ட கீழ்க்காணும் 3 அறிவிப்புகளுக்கு பின்வருமாறு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது:-

(i) தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் 2023-ஆம் ஆண்டு பொன்விழா ஆண்டை கொண்டாடுவதற்கு தேவையான நிதி ரூ.1.00 கோடிக்கு (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிர்வாக ஒப்பளிப்பு வழங்கப்படுகிறது. மேற்கண்ட பொன்விழாவை கொண்டாடுவது தொடர்பாக உரிய நேரத்தில் நிதி வழங்கப்படும்.

(ii) ரூபாய்.5.00 கோடி செலவில் 4 பூம்புகார் விற்பனை நிலையங்களை புதுப்பிக்கவும், ரூபாய் ஒரு கோடி செலவில் மாமல்லபுரத்தில் அமைந்துள்ள நகர்ப்புறக் கண்காட்சித் திடல் விரிவாக்கப் பணிகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.6,00,00,000/- (ரூபாய் ஆறு கோடி மட்டும்) வழங்கலாம் என்றும், அரசு வழங்கும் நிதி உதவிகள் மற்றும் மானியங்களை சேமிப்பு கணக்கில் சேர்ப்பதற்கு பதிலாக பொதுவைப்பு கணக்கில் (public Deposit Account) செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடப்படுகிறது.

5. மேலே, பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> "2851–00. கிராமத் தொழில்களும் சிறு தொழில்களும் – 104. கைத்திறத் தொழில்கள் – மாநிலச் செலவினங்கள் – JN. தமிழ்நாடு கைவினைப் பொருட்கள் மேம்பாட்டுக் கழகத்திற்கு நிதியுதவி – கதர் மற்றும் கிராமத் தொழில்கள் – 309. உதவித் தொகை – 03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".
>
> (IFHRMS (த.தொ.கு. 2851–00–104–JN–30903)

6. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள செலவினத்தை மேற்கொள்ள தேவைப்படும் கூடுதல் தொகை ரூ.3,40,50,000/–, 2021–2022–ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். இருப்பினும், மேற்கண்ட செலவினம் 2021–2022–ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் கொணர்ந்து சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். இந்நிதியொதுக்கம் செய்ய இருப்பதை எதிர்நோக்கி மேலே பத்தி 4–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை மேற்கொள்ள தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது. மேலும், 2021–2022–ஆம் ஆண்டின் துணை மதிப்பீடுகளில் சேர்க்கத் தக்க வகையில் உரிய விளக்கக் குறிப்பினையும் மற்றும் திருத்த மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கான உரிய கருத்துருவையும் தவறாது நிதி (தொழில்கள்/வ,செ.பொ.I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. மேலே பத்தி 4–இல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகையினை பெற்று தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு பின்வரும் வங்கிக் கணக்கில் மின்னணு முறையில் வழங்க, பிரிவு அலுவலர் (பட்டியல்), கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, தலைமைச் செயலகம், சென்னை–09 அவர்களுக்கு அதிகாரமளிக்கப்படுகிறது:–

> "K.வைப்பீடுகள் மற்றும் முன் பணங்கள் (b) வட்டி பெறா வைப்பீடுகள் – 8443–00. உரிமையியல் வைப்பீடுகள் – 800. ஏனைய வைப்பீடுகள் – BR. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் வைப்பீடுகள் – 801. வரவுகள் – 02. வட்டி பெறா வரவுகள்
>
> (IFHRMS (த.தொ.கு. 8443–00–800–BR–80102)

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.161/JS(GKT)/நிதி(தொழில்கள்)/2021, நாள் 02.11.2021–இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண்.763 (எழுநூற்று அறுபத்து மூன்று)

(ஆளுநரின் ஆணைப்படி)

அபூர்வா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், சென்னை–02.
தலைமைச் செயல் அலுவலர்,
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், குறளகம், சென்னை–014.
பிரிவு அலுவலர் (பட்டியல்),
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை,
தலைமைச் செயலகம், சென்னை–09.
சம்பளக் கணக்கு அலுவலர், (தலைமைச் செயலகம்/ தெற்கு),
சென்னை –09/35.
தலைமைக் கணக்காயர், சென்னை –18.
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (நிதி மற்றும் மனிதவள மேலாண்மை)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு அமைச்சர் (ஊரகத்தொழில்)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –09.
நிதி (தொழில்கள்/வரவு செலவு பொது–I/II/வ.வ–I)த்துறை, சென்னை–09.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலர்,
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த்துறை, சென்னை–09.
கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்(அநமு)த்துறை, சென்னை–09.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்